இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 48 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 11 – சனிக்கிழமை 27 செப்டம்பர் 2025 – வெளியூர் 12 + 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 48 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 11 - Saturday 27 September 2025 - Dak 12+16 Pages ₹ 5.00





சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று முன்தினம் (25.9.2025) நடைபெற்ற "கல்வியில் சிறந்த தமிழ்நாடு" என்னும் கருப்பொருளில் தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியினை கொண்டாடும் விழாவில், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மாதிரிப் பள்ளிகள், விளையாட்டுச் சாதனையாளர்கள், அரசுப் பள்ளிகளிலிருந்து முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் சென்ற சாதனையாளர்கள்; ஆகிய திட்டங்களில் பயன்பெற்ற மாணவ, மாணவியர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வதற்காக வருகை தந்த தெலங்கானா முதலமைச்சர் அ. ரேவந்த் ரெட்டி ஆகியோருடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### கல்வியில் உயர்ந்த தமிழ்நாடாக மாற்றுவோம்! எனது இலக்கு 'அனைவருக்கும் உயர் கல்வி'!

# நமது மாணவர்களின் வெற்றி - திசையெங்கும் எதிரொலிக்க வேண்டும்!

## 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுரை!

**சென்னை, செப். 27-**

**கல்வியில் உயர்ந்த தமிழ்நாடாக மாற்றுவோம்! எனது இலக்கு அனைவருக்கும் உயர் கல்வி! நம் மாணவர்களின் வெற்றி திசையெங்கும் எதிரொலிக்க வேண்டும் என 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' விழாவில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.9.2025) சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற, "கல்வியில் சிறந்த தமிழ்நாடு" விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-**




"கல்வியில் சிறந்த தமிழ்நாடு" நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பு விருந்தினராக வருகை தந்து நம்மை பெருமைப்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய

தெலங்கானா மாநிலத்தின் My dear Chief Minister ரேவந்த் ரெட்டி அவர்களே,

தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் தம்பி உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே,

அரசியல் இயக்கத்தின் தலைவர்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

தலைமைச் செயலாளர் முருகானந்தம், உள்ளிட்ட அரசு அலுவலர்களே,

வருகை தந்துள்ள சிறப்பு விருந்தினர்களான திரைக் கலைஞர்கள், கல்வியாளர்கள், அனைத்து சான்றோர் பெருமக்களே,

என் கண்ணின் மணிகளான மாணவச் செல்வங்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

**நம் உழைப்பின் பலன் கண் முன்னே தெரிகிறது!**

இங்கே பேசிய மாணவர்களின் பேச்சைக் கேட்க கேட்க, நான் மிகவும் Emotional ஆகிவிட்டேன். ஏனென்றால், உங்களுடைய கருத்துக்களையும், Feedbackகையும் கேட்கும்போது, நாம் உழைக்கின்ற உழைப்புக்கான பலன், நம்முடைய கண் முன்னாலேயே தெரிகிறது என்று நான் இங்கே உணர்ந்திருக்கிறேன்; அதற்காக பெருமைப்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய எல்லோரும், தமிழ்நாடு எந்தளவுக்கு கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது, எப்படியெல்லாம் திட்டங்களைக் கொண்டு வந்து, எத்தனை இடர்கள் வந்தாலும், தன்னுடைய மாணவர்களை முன்னேற்றுகிறது என்று பேசினார்கள்!

**இந்த விழா எங்களைப் பாராட்ட அல்ல! மாணவர்களைக் கொண்டாடும் விழா!**

இந்த நிகழ்ச்சி நடத்துவதற்கு முக்கியக் காரணம், எங்களை பாராட்டிக் கொள்வதற்காக அல்ல, இன்றைக்கு நாங்கள் உங்களை கொண்டாடுவதை பார்த்து, அடுத்தடுத்த Batch மாணவர்களும், இன்னும் படிப்பு மீது ஆர்வம் அதிகமாக வேண்டும்! அது தான் முக்கியம்! அதிலும், தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள், இந்த விழாவுக்கு வந்து, நம்மையெல்லாம் பெருமைப்படுத்தி இருக்கிறார்; மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறார்!

தங்கை கனிமொழி அவர்கள் மூலமாக, மாணவர்கள் நிகழ்ச்சி என்று சொல்லி அழைத்ததும், உடனே ஓ.கே. சொல்லி, பல பணிகளுக்கு இடையிலே இங்கே வந்திருக்கிறார். நம்முடைய அரசின் மகளிர் விடியல் பயணம் திட்டம் போலவே, தெலங்கானா மாநிலத்திலும், மகாலட்சுமி திட்டம் என்கிற பெயரில், பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.


தொடர்ச்சி 3– ஆம் பக்கம்


## முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தெலுங்கானாவிலும் அமல்!

## முதல்வர் ரேவந்த் ரெட்டிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நன்றி!

**சென்னை, செப்.27-**

**முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தெலுங்கானாவிலும் அமல்படுத்தப்படும் என அறிவித்த முதலமைச்சர் ரேவந்த் ரெட்டிக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில்,

"கல்வியில் சிறந்த தமிழ்நாடு" மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்ட விழாவில் கலந்துகொண்ட தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டிக்கு நன்றி என தெரிவித்துள்ளார். முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை, அடுத்த கல்வியாண்டில் இருந்து தெலுங்கானாவில் கொண்டு வர இருப்பதாக அறிவித்தமைக்காக, தெலுங்கானா முதலமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

திராவிட மாடல் அரசின், புதுமைப்பெண், நான் முதல்வன் மற்றும் தமிழ்ப்புதல்வன் போன்ற முதன்மைத் திட்டங்களை பாராட்டுவதன் மூலம், கல்வியில் தமிழ்நாடு முன்னோடியாக, இந்தியாவிற்கு வழிவகுக்கும் என்பதை தெலுங்கானா முதலமைச்சர் உறுதிப்படுத்தி இருப்பதாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.